




சென்னை – அண்ணா அறிவாலயத்தில், நேற்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சியைச் சேர்ந்த முன்னாள் எம்.எல்.ஏ., பனையூர் பாபு தலைமையில் மாற்றுக் கட்சியைச் சேர்ந்த 1000க்கும் மேற்பட்டோர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். கழகத்தில் இணைந்த பனையூர் பாபு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு செங்கோல் வழங்கினார்.

# த.வெ.க. ஆட்சி 3 மாதங்களாவது தாங்குமா?

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் உரை!... முதல் பக்கத் தொடர்ச்சி

இலட்சக்கணக்கான கழக உடன்பிறப்புகளில் ஒருவராக உங்களை இணைத்துக்கொள்ள வந்திருக்க உங்கள் அனைவரையும், இந்த இயக்கத்தின் முதன்மைத் தொண்டனாக மிகுந்த மகிழ்ச்சியோடு வாஞ்சையோடு வருக வருக வருக என்று நான் வரவேற்கிறேன்.

**கொள்கைவாதியாக பேசக் கூடியவர்!**

பனையூர் பாபு அவர்களைப் பற்றி நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் என்று சொன்னால், கடந்த ஐந்து வருடங்களாக நான் சட்டமன்றத்தில் அவரைத் தொடர்ந்து கூர்ந்து கவனித்ததுண்டு. சட்டமன்றத்திற்கு வரும்போது அமைதியாக வருவார், அமைதியாகச் செல்வார்; ஆனால், அதே சமயம் சட்டமன்றத்தில் எழுந்து பேசும்போது ஆக்கப்பூர்வமான கருத்துக்களை, தன்னுடைய தொகுதிக்குச் சம்பந்தப்பட்டிருக்கும் பிரச்சினைகளை அங்கே வலியுறுத்திப் பேசக்கூடியவர். ஒரு கொள்கைவாதியாக, ஒரு இலட்சியவாதியாக, ஒரு போராளியாகத் தன்னுடைய கருத்துகளை முன்வைத்துப் பேசக்கூடியவர்.

பொதுவாகச் சிலர் ஒரு இயக்கத்தில் இருந்து வெளியேறுகிறபோது, மற்றொரு இயக்கத்தில் சென்று சேருகிறபோது, சிறிது விமர்சனம் செய்து, ஏன் தரம் தாழ்ந்து கூடப் பேசும் பாணியைப் பார்த்திருக்கிறோம். ஆனால் நம்முடைய பாபு அவர்கள் அப்படி அல்ல. அரசியல் மாறுபாடுகளையும் வேறுபாடுகளையும் அடக்கத்தோடு சுட்டிக்காட்டி, ஏற்கனவே ஓர் அறிக்கையாக வெளியிட்ட அந்தச் செய்தியை நீங்கள் படித்திருப்பீர்கள், நானும் படித்தேன். அப்படி வெளியிட்ட அந்தச் செய்திகளில் யாரையும் புண்படுத்தும் வகையில் எந்த வார்த்தையும் இல்லை; அமைதியாக, அழகாக, அடக்கமாக அவர் கையாளும் விதம்... இப்போது கூடப் பேசும்போது நீங்கள் பார்த்திருக்கலாம்... யாரையாவது விமர்சனம் செய்து பேசினாரா? இல்லை! எதற்காக இந்த இயக்கத்தில் சேர்ந்திருக்கிறோம், அதைத்தான் அவர் இங்கே வலியுறுத்தி, வற்புறுத்தி, அழகாக எடுத்துச் சொல்லி அவர் பேசியிருக்கிறார். கொண்ட கொள்கைக்காக உறுதியோடு உழைக்கும் ஒரு செயல்வீரர்தான், நம்முடைய பனையூர் பாபு அவர்கள். அதற்கு அவருடைய அரசியல் பயணமே சாட்சியாக அமைந்திருக்கிறது.

**ஊடக வலிமையை உருவாக்க தொலைக்காட்சி!**

2007இல் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியில் சேர்ந்து, 2009இல் இளஞ்சிறுத்தை எழுச்சிப் பாசறையின் மாநிலத் துணைச் செயலாளர் பொறுப்பேற்று, அந்த அமைப்பிற்கு ஓர் ஊடக வலிமையை உருவாக்க வேண்டும் என்பதற்காகத் தொலைக்காட்சி ஒன்றையும் அவர் உருவாக்கி இருக்கிறார். அந்த ஊடகப் பிரிவின் முதன்மைச் செயலாளராக இருந்து பணியாற்றி இருக்கிறார். அப்படிப்பட்ட அந்த உழைப்பாளர் தான் 2021ஆம் ஆண்டு செய்யூர் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக அவர் உயர்ந்தார்.

அவரே சொன்னார், சட்டமன்றத்தில் நம்முடைய திராவிட மாடல் அரசின் சார்பில் செய்திருக்கும் சாதனைகளை எல்லாம் எடுத்துச் சொன்னார். சட்டமன்றத்தில் அதற்கான கேள்விக் கணைகளை எல்லாம் தொடுத்தார், கோரிக்கைகளை எல்லாம் எடுத்து வைத்தார். தனக்காக அல்ல, தன்னுடைய தொகுதிக்காக, தனது தொகுதியில் இருக்கும் மக்களுக்காக அவர் அந்தப் பணியை ஆற்றி இருக்கிறார். அதுமட்டுமல்ல, அவரே குறிப்பிட்டார், ஒட்டுமொத்தமாக ஆதிதிராவிட மக்களின் நலனுக்காகக் கோரிக்கைகளை நாங்கள் வைத்தோம். “என்னுடைய சார்பில் மட்டுமல்ல, என்னுடைய இயக்கத்தின் சார்பில் கூட நாங்கள் கோரிக்கைகள் வைத்தோம், அதையெல்லாம் அவர் ஏற்றுக்கொண்டு நிறைவேற்றித் தந்திருக்கிறார்” என்பதைப் பட்டியலிட்டு, குறிப்பிட்டுச் சொன்னார்.

**கோரிக்கைகள் நிறைவேற்றம்!**

★ பரமக்குடியில் சாதி எதிர்ப்பு சுயமரியாதைப் போராளி இமானுவேல் சேகரனார் அவர்களுக்கு மணிமண்டபம் அமைத்தது திராவிட மாடல் அரசுதான்.

★ அதேபோன்று, ஆதிதிராவிடர் பள்ளிகளின் பெயர்களில் சாதிப் பெயர்கள் இருக்கக் கூடாது, அந்த அடையாளங்களை நீக்க வேண்டும் என்று சொல்லி அதையும் சட்டமாக்கித் தந்தோம்.

★ அதேபோன்று, தாத்தா இரட்டைமலை சீனிவாசனுக்கு மணிமண்டபம் அமைத்துத் தந்தோம்.

★ அதேபோன்று, அருமைப் பெரியவர், பெருந்தலைவர் எல். இளையபெருமாள் அவர்களுக்குச் சிதம்பரத்தில் நூற்றாண்டு நினைவரங்கத்தை அமைத்துக் கொடுத்தோம்.

★ இங்கே நந்தனத்தில் நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்... எம்.சி. ராஜா மாணவர் விடுதி. அது ஒரு காலத்தில் எப்படி இருந்தது? இப்போது அண்ணா சாலையில் வருகிறபோது, எம்.சி. ராஜா மாணவர் விடுதி என்ற அந்தப் புதிய கட்டிடத்தைப் பார்க்கிறபோது நமக்கே பிரமிப்பாக இருக்கிறது, அதையும் புதுப்பித்து உருவாக்கித் தந்திருக்கிறோம்.

**செய்யூர் தொகுதிக்கு செய்த திட்டங்கள்!**

குறிப்பாக நம்முடைய பனையூர் பாபு அவர்களின் செய்யூர் தொகுதிக்குச் செய்யப்பட்ட திட்டங்களைப் பற்றி அவரே சொன்னார். இருந்தாலும் நானும் அதை வழிமொழியக் கடமைப்பட்டிருக்கிறேன்:

★ செய்யூரில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,

★ புதிய சிப்காட் தொழிற்சாலை,

★ அரசு மருத்துவமனை,

★ 28 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள்,

★ மீனவ மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க வலைப்பின்னல் கூடங்கள்,

★ கடல் சீற்றத்தால் ஏற்படும் கடல் அரிப்பைத் தடுத்துக் குடியிருப்புகளைப் பாதுகாக்கக் கடலோரங்களில் கருங்கல் கொட்டும் தடுப்புச் சுவர்கள்,

★ பத்தாயிரம் பேருக்கு இலவச வீட்டு மனைப் பட்டாக்கள்...

இவ்வாறு பல்வேறு சாதனைகள் செய்யப்பட்டிருக்கிறது என்று சொன்னால், “நாங்கள் செய்தோம்” என்றால் அதற்குக் காரணமாக இருந்தவர், உங்களுடைய செய்யூர் சட்டமன்றத் தொகுதியின் உறுப்பினராக இருந்த பனையூர் பாபு அவர்கள்தான்.

> **“புரட்சியாளர் அம்பேத்கர், தந்தை பெரியார், மாமேதை கார்ல் மார்க்ஸ் ஆகியோர் காட்டிய வழியில், ஒடுக்கப்பட்ட மக்களின் நலனுக்காக என்னுடைய பயணம் தொடர்ந்து கொண்டே இருக்கும்” என்று நம்முடைய பாபு அவர்கள் தன்னுடைய அறிக்கையில் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். அந்தப் பயணத்தைத் தொடர ஒரு சரியான இயக்கமாக இருப்பதுதான் திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை உணர்ந்து இங்கே வந்து அவர் இணைந்திருக்கிறார். அவரையும் அவரோடு வந்திருக்கும் உங்கள் அனைவரையும் இந்த இயக்கத்தின் தலைவனாக மட்டுமல்ல, இந்த இயக்கத்தின் தலைமைத் தொண்டனாக வருக, வருக, வருக என்று வரவேற்கிறேன்.**

**கழகத்தில் இணைந்தது பன்மடங்கு மகிழ்ச்சி!**

இப்படிப்பட்ட ஆற்றலுக்குச் சொந்தக்காரர் மட்டுமல்ல... “தந்தை பெரியாரும், அண்ணல் அம்பேத்கரும் நமக்கு வகுத்துத் தந்திருக்கும் கொள்கைகளே என்றென்றும் வாழும் நிலையான ஆயுதங்கள்” என்று அறிக்கை வெளியிட்ட ஒரு கொள்கைவாதிதான், இங்கே வந்திருக்கும், இந்த இயக்கத்தில் இன்று தன்னை இணைத்துக் கொண்டிருக்கும் நம்முடைய பனையூர் பாபு அவர்கள்.

அவர் இன்றைக்குத் திராவிட முன்னேற்றக் கழகத்தில் வந்து சேர்ந்திருப்பதில் நீங்கள் எல்லாம் எவ்வாறு மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கிறீர்களோ, அவர் எப்படி மகிழ்ச்சியோடு வந்திருக்கிறாரோ, அதைவிடப் பன்மடங்கு மகிழ்ச்சியை நாங்கள் அடைந்து கொண்டிருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**சரியான இயக்கம் தி.மு.க.தான்!**

“புரட்சியாளர் அம்பேத்கர், தந்தை பெரியார், மாமேதை கார்ல் மார்க்ஸ் ஆகியோர் காட்டிய வழியில், ஒடுக்கப்பட்ட மக்களின் நலனுக்காக என்னுடைய பயணம் தொடர்ந்து கொண்டே இருக்கும்” என்று நம்முடைய பாபு அவர்கள் தன்னுடைய அறிக்கையில் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். அந்தப் பயணத்தைத் தொடர ஒரு சரியான இயக்கமாக இருப்பதுதான் திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை உணர்ந்து இங்கே வந்து அவர் இணைந்திருக்கிறார். அவரையும் அவரோடு வந்திருக்கும் உங்கள் அனைவரையும் இந்த இயக்கத்தின் தலைவனாக மட்டுமல்ல, இந்த இயக்கத்தின் தலைமைத் தொண்டனாக அவரை வருக, வருக, வருக என்று வரவேற்கிறேன்.

தி.மு.க.வைப் பொறுத்தவரைக்கும், எதிர்க்கட்சியாக இருக்கும்போதுதான் வேலை அதிகமாக இருக்கும். அப்படிப்பட்ட நேரத்தில் உழைப்பதற்குத் தயாராக நாங்கள் இருக்கிறோம், “நாங்கள் உங்களுக்குத் துணை நிற்கிறோம்” என்று நமக்கு இன்றைக்குத் துணையாக வந்து சேர்ந்திருக்கும் பாபு அவர்களையும், உங்களையும் நான் மீண்டும் வருக வருக வருக என்று வரவேற்கிறேன்.

**விமர்சிக்கத் தேவையில்லை!**

நீங்கள் ஏற்கனவே இருந்த இயக்கம்... அந்த இயக்கத்தைப் பற்றி விமர்சனம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை, செய்யவும் கூடாது; விமர்சிக்கத் தேவையில்லை. ஏனென்றால் அண்ணா அவர்கள், “மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணமுண்டு” என்றுதான் சொல்லி இருக்கிறாரே தவிர, யாரையும் குறைத்து மதிப்பிட்டுப் பேச வேண்டிய அவசியம் இல்லை. அதைத்தான் இங்கே நம்முடைய பாபு அவர்கள் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். ஏதாவது ஒரு வார்த்தை விமர்சித்து பேசினாரா? இல்லை! குறைத்துப் பேசினாரா? இல்லை! அதுதான் பாபு, அதுதான் பனையூர் பாபு. எனவே, அப்படிப்பட்ட பாபு அவர்கள் இன்றைக்குத் தன்னை இணைத்துக் கொண்டிருக்கிறார், நான் அவரை மீண்டும் மீண்டும் வருக வருக என வரவேற்கிறேன்.

**3 மாதமாவது தாங்குமா?**

இன்றைக்கு நாட்டில் நடந்து கொண்டிருக்கும் ஒரு ஆட்சி எப்படிப்பட்ட ஆட்சி என்பதெல்லாம் நான் அதிகம் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. ஏற்கனவே இந்த ஆட்சிப் பொறுப்பேற்ற நேரத்தில் நான் சொன்னேன், “ஆறு மாதங்களுக்கு இதைப்பற்றி நான் பேசப் போவதில்லை” என்று. ஆனால், ஆறு மாதங்களுக்கு முன்பே பேச வேண்டிய ஒரு சூழ்நிலை வந்துவிடுமோ என்ற அச்சம்தான் இருந்து கொண்டிருக்கிறது; வந்துவிட்டது. அதைப் பலர் பேசிக் கொண்டிருக்கிறார்கள், இந்த விமர்சனங்கள் எல்லாம் வந்து கொண்டிருக்கிறது. ஆறு மாதம் அல்ல, ஐந்து மாதம் அல்ல, நான்கு மாதம் அல்ல... மூன்று மாதமாவது தாங்குமா என்ற கேள்விக்குறியோடுதான் இன்றைக்கு ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது.

இந்த நிலையில்தான் இன்றைக்கு நீங்களும் வந்து இந்த இயக்கத்தில் தங்களை இணைத்துக் கொண்டிருக்கிறீர்கள். எனவே, கழகம் ஈடுபடும் எந்தப் பணிகளாக இருந்தாலும், அந்தப் பணிகளுக்கு நீங்களும் ஒத்துழைப்பு தருவதற்காக வந்திருக்கிறீர்கள். அண்ணா அறிவாலயத்திற்கு வந்திருக்கிறீர்கள். அண்ணா அறிவாலயம் மட்டுமல்ல, கலைஞர் அரங்கத்திற்கே வந்திருக்கிறீர்கள்; அப்படிப்பட்ட சூழ்நிலையில் உங்களை எல்லாம் மீண்டும் மீண்டும் வருக வருக வருக என்று வரவேற்று விடை பெறுகிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

### மயக்க மருந்து கொடுத்து பாலியல் வன்கொடுமை செய்த

# 2 த.வெ.க. நிர்வாகிகளுக்கு கடும் தண்டனை வழங்க வேண்டும்!

## அமைச்சர்களிடம் புகாரளித்தும் பயனில்லை என பாதிக்கப்பட்ட பெண் கண்ணீர்!

தூத்துக்குடி, ஜூன் 8 –

வேலை வாங்கித் தருவதாக கூறி அழைத்துச் சென்று, பாலியல் வன்கொடுமை செய்த த.வெ.க. நிர்வாகிகள் 2 பேருக்கு கடுமையான தண்டனை வழங்க வேண்டும் என பாதிக்கப்பட்ட பெண் கூறியுள்ளார்.

தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் பகுதியைச் சேர்ந்த பெண்ணை, வேலைவாங் கித் தருவதாக காரில் அழைத் துச் சென்று, குளிர்பானத் தில் மயக்க மருந்து கலந்து கொடுத்து, பாலியல் வன்கொடுமை செய்ததாக புகார் எழுந்தது. இதுகுறித்து தூத்துக் குடி மேற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளராக இருந்த ஆறுமுகமங்கலம் பகுதியைச் சேர்ந்த பாலசுப்பிரமணியன், அவரது நண்பர் த.வெ.க. நிர்வாகியான ராமநாதபுரம் பகுதி யைச் சேர்ந்த ஜெயபால் ஆகிய 2 பேர் கைது செய்யப்பட்டனர்.

இதுகுறித்து, பாதிக்கப்பட்ட பெண் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

கடந்த 2 ஆண்டு களாக, திருவைகுண்டம் எம்.எல்.ஏ. வி.ஜி. சரவணனுடன் இணைந்து கட்சி பணி செய்துவருகிறேன். கடந்த 7 மாதங்களுக்கு முன்பு பாலசுப்பிரமணி யன் என்பவர் அறிமுகமானார். அவர் என்னிடம் வி.ஜி.சரவண னின் லாட்டரி தொழில் மூலம் வேலை ஏற்பாடு செய்து தருவதாகவும் அதற்காக ராமநாதபுரம் சென்று முகவர் ஒருவரை பார்க்க வரும்படியும் மே 3ம் தேதி அழைத்துச் சென்றார். வழியில் சாயல்குடி அருகே குளிர் பானத்தில் மயக்க மருந்து கலந்து கொடுத்துள்ளார். இது தெரியாமல் குடித் ததில் மயக்க நிலையில் இருந்த என்னை ராமநாதபுரத்தில் உள்ள ஒரு விடுதி அறையில் அடைத்து வைத்து பாலாவும் மற்றொருவரும் சேர்ந்து என்னை பாலியல் வன்கொடுமை செய்தனர்.

இதுகுறித்து கேட்டபோது, ‘உன்னை சரவணன் தான் அழைத்து வரச்சொன்னார். அவரிடம் கேட்டுக்கொள் என்றனர்.

பின் னர் அவரை தொடர்பு கொண்டு பேசும்போது, இதையெல்லாம் பெரிதுபடுத்த வேண்டாம் என்றார். அதன்பின்னர்,

‘இதுபற்றி வெளியே கூறினால் உனது குழந்தையை கொலை செய்து விடுவோம்’ என வன்கொடுமை செய்த இருவரும் மிரட்டினர்.

இதுபற்றி அமைச்சர்கள் ஆதவ் அர்ஜுனா, ஜெகதீஸ்வரியிடம் புகார் தெரிவித்தேன்.

த.வெ.க. ஆட்சியிலும் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை. குற்றவாளிகள் இருவருக்கும் கடும் தண்டனை வழங்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

---

# புதுக்கோட்டையில் முத்தமிழறிஞர் கலைஞரின் 103வது பிறந்த நாள் விழா!

புதுக்கோட்டை, ஜூன் 8 -

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103 பிறந்த நாளை முன்னிட்டு புதுக்கோட்டையில் மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில் மாவட்டக் கழக அலுவலகத்தில் அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டு பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் கவிச்சுடர் கவிதைப்பித்தன், டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ, த.சந்திரசேகரன், சுப. சரவணன்,

அரு.வீரமணி, செ. அசோக் பாண்டியன், கே.ஆர்.என்.போஸ், எஸ்.எஸ்.கருப்பையா, க.மதியழகன், பி.ராஜேஸ் வரி, கீரை.தமிழ் ராஜா. சு.சண்முகம், துணை மேயர் எம்.லியாகத் அலி, வே.ராஜேஸ், தவ. பாஞ்சாலன், என்.சாத்தையா, இராசு.சந்தோஷ், செல்லத்துரை, சி.ஆர். வி.சித்ரா, ஆர்.ஆர்.சாமிநாதன், அ.ரெத்தினம், செந்தாமரை பாலு, கவிவேந்தன், சி.அரங்கநாயகம், எஸ்.வி.ஆர்.ஸ்டாலின் ராஜா, மு.கலைஞர் கருணாநிதி, மா.மணிவேலன், சி.பழனிவேலு, சேட் (எ) ஷாஜகான், சி.வெற்றிச்செல்வன், ஏ.எல்.கணேசன், காதர்கனி, வடவாளம் க.செ.மணிமாறன், டி. அப்புக்காளை, வை. நடராஜன் மற்றும் பலர்பங்கேற்றனர்.

---

# தலைமைக் கழக அறிவிப்பு!

ஊடக விவாதங்களில் கழகத்தின் சார்பில் செய்தித் தொடர்புக் குழுவினர் கலந்து கொள்வதையும், பல்வேறு விவகாரங்களில் கழகத்தின் நிலைப்பாட்டை ஊடகங்களில் தெளிவுபடுத்திடும் பணிகளையும் ஒருங்கிணைத்திட வழக்கறிஞர் இ.பரந்தாமன், டாக்டர் ஹபிசுல்லா, சூர்யா கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் நியமிக்கப்படுகின்றனர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**